10.02.16

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### விவசாய கிணறுகளுக்கு தாமதமின்றி மின் இணைப்பு வழங்க வலியுறுத்தல்

விவசாய கிணறுகளுக்கு தாமதமின்றி மின் இணைப்பு வழங்க வேண்டுமென தமிழக விவசாயிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து, அச்சங்கத்தின் மாநில செயலர் ஆர். ராஜாசிதம்பரம் தமிழக அரசுக்கு அனுப்பிய மனுவில் தெரிவித்திருப்பதாவது:

விவசாயிகளின் டிராக்டர் மற்றும் வேளாண் கருவிகளைப் பறிமுதல் செய்யும் தேசிய வங்கிகளின் விவசாய விரோதப் போக்கை கைவிட வேண்டும். நிபந்தனையின்றி அனைத்து விவசாயக் கடன்களையும் ரத்து செய்ய வேண்டும். ஜப்தி செய்யப்பட்ட டிராக்டர்களை நிபந்தனையின்றி திருப்பித் தர வேண்டும். வேளாண் பயிர் காப்பீட்டுத் திட்டம் அனைத்து மாவட்டங்களுக்கும் கிடைக்கும் வகையில் திருத்தம் கொண்டுவந்து செயல்படுத்த வேண்டும்.

தோட்டக்கலை மின் இணைப்புகளுக்கும் இலவச மின்சாரம் வழங்க வேண்டும். ஏரி, குளங்களில் வண்டல் மண் அள்ளுவதற்கு அனுமதி அளிக்க வேண்டும்.

கூட்டுறவு மற்றும் தனியார் சர்க்கரை ஆலைகள் விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய கரும்பு நிலுவைத் தொகையை வழங்க வேண்டும். கெயில் நிறுவனத்திற்கு உச்ச நீதிமன்றம் அனுமதி அளித்திருப்பது விவசாயிகளிடையே அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. எனவே, இதுகுறித்து தமிழக அரசு சட்டப்பூர்வ நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நடமாடும் நெல் கொள்முதல் நிலையங்கள்: ஆட்சியர் தகவல்

திருவாரூர் மாவட்ட விவசாயிகள் நடமாடும் நெல் கொள்முதல் நிலையங்களில் விற்பனை செய்து பயன்பெறலாம் என தெரிவித்துள்ளார் மாவட்ட ஆட்சியர் எம். மதிவாணன்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: மாவட்டத்தில் 433 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றுடன் தாலுகாவிற்கு ஒன்று என்ற அளவில் நடமாடும் நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. விவசாயிகள் தங்களிடம் 200 மூட்டைகளுக்கு மேல் இருக்கும்பட்சத்தில் திருவாரூரில் உள்ள நுகர்பொருள் வாணிபக்கழக முதுநிலை மண்டல மேலாளர் அலுவலகத்தில் தங்களது பெயர், இடம், செல்லிடப்பேசி எண் ஆகிய தகவல்களை 04366-222542 என்ற தொலைபேசி எண் மூலம் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

இதையடுத்து முன்னுரிமை அடிப்படையில் தங்களை அணுகி நெல் மூட்டைகளின் எண்ணிக்கை, நெல்லின் தரம், சிட்டா அடங்கல் ஆகியவற்றை சரிபார்த்த பின்பு நெல் கொள்முதல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இந்த வாய்ப்பை விவசாயிகள் பயன்படுத்திக்கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறது.

## வேளாண் துறை செயல்விளக்க உதவியாளர்களுக்கு பணி ஆணை

வேளாண்மை துறை செயல்விளக்க உதவியாளர்களுக்கு பதவி உயர்வு ஆணைகளை முதல்வர் என்.ரங்கசாமி திங்கள்கிழமை இரவு சட்டப்பேரவை வளாகத்தில் வழங்கினார்.

பேரவைத் தேர்தல் நெருங்கி வருவதை ஒட்டி பல்வேறு துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு பதவி உயர்வு ஆணைகளை புதுவை அரசு வழங்கி வருகிறது.

அதன்படி, வேளாண் துறையில் காலியாக இருந்த 41 செயல்விளக்க உதவியாளர் பணியிடங்கள் பதவி உயர்வு மூலம் நிரப்பப்பட்டன.

இதற்கான பணி ஆணைகளை முதல்வர் என்.ரங்கசாமி பயனாளிகளுக்கு வழங்கினார். அரசுச் செயலர் டி.கரிகாலன், இயக்குநர் ஏ.ராமமூர்த்தி, கூடுதல் இயக்குநர் பி.ராமகிருஷ்ணன் உள்ளிட்டோர் உடனிருந்தனர். இதன் மூலம் வேளாண் துறையின் 41 மஸ்தூர் பணியாளர்கள் பயன் பெற்றனர்.

## கரும்பு விவசாயிகளின் பிரச்னை தேர்தலுக்குப் பிறகு தீர்க்கப்படும் :முதல்வர் சித்தராமையா

கரும்பு விவசாயிகளின் பிரச்னை தேர்தலுக்குப் பிறகு தீர்க்கப்படும் என்று, கர்நாடக முதல்வர் சித்தராமையா தெரிவித்தார்.
பீதர் சட்டப்பேரவைத் தொகுதிக்கான இடைத்தேர்தலில் காங்கிரஸ் வேட்பாளராகப் போட்டியிடும் ரஹீம் கானை ஆதரித்து பீதரில் ஞாயிற்றுக்கிழமை வீதி வீதியாகச் சென்று முதல்வர் சித்தராமையா வாக்குச் சேகரித்தார். பின்னர், அக்கமகாதேவி கல்லூரி வளாகத்தில் கர்நாடக மாநில விவசாயிகள் சங்க மாவட்டத் தலைவர் மல்லிகார்ஜுன் சுவாமி உள்ளிட்ட பிரதிநிதிகள் முதல்வர் சித்தராமையாவை சந்தித்துப் பேசினர். கரும்பு விவசாயிகளுக்கு சர்க்கரை ஆலைகள் வழங்க வேண்டிய நிலுவைத் தொகை, கரும்புக்கான நியாயமான ஆதரவு விலை (எஃப்.ஆர்.பி.) குறித்து முதல்வர் சித்தராமையாவுடன் விவாதித்தனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் முதல்வர் சித்தராமையா கூறியது: கரும்பு விவசாயிகள் பிரச்னைகளுக்கு சட்டப்பேரவை இடைத்தேர்தல் மற்றும் மாவட்டப் பஞ்சாயத்துத் தேர்தலுக்குப் பிறகு தீர்வு காணப்படும். சர்க்கரை விலை உயர்ந்துள்ளதால், கரும்பு விவசாயிகளுக்கு சர்க்கரை ஆலைகள் இனிமேல் நியாயமான ஆதரவு விலையை வழங்க வேண்டியது அவசியமாகும். எனது தலைமையிலான காங்கிரஸ் அரசு விவசாயிகளுக்கு ஆதரவானதாகும். விவசாயிகளுக்கு தற்போது வழங்கப்படும் 6 மணி நேர மின்சாரம், மே மாதத்துக்குள் 8 மணி நேரமாக உயர்த்தப்படும். தேர்தலுக்குப் பிறகு அமைச்சரவைக் கூட்டத்தைக் கூட்டி விவசாயிகளின் பிரச்னைகளுக்குத் தீர்வு காணப்படும் என்றார்.

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

## அஸ்காவுக்கு பதில் நாட்டு சர்க்கரை: கடைகளில் 'டீ' விற்பனை அதிகரிப்பு




கரூர்: கரூரில், நாட்டு சர்க்கரை, 'டீ' க்கு நாளுக்கு நாள் மவுசு அதிகரித்து வருவதால், நாட்டு சர்க்கரைக்கு விலையும் உயர்ந்து வருகிறது.

உலக அளவில் சர்க்கரை நோயாளிகள் அதிகரிக்கும் நாடுகளில், இந்தியா முன்னணியில் உள்ளது. இதற்கு காரணம் உடல் உழைப்பு குறைவு, மாவு சத்து அதிகம் உள்ள பொருட்கள், மாமிச உணவு வகைளை சாப்பிடுதல், பாஸ்ட் புட் உணவு வகைளுக்கு முக்கியத்துவம் உள்ளிட்ட காரணங்கள் மற்றும் மரபு ரீதியாக ஏற்படும் பிரச்னைகள் தான், என உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது. இதனால், சமீப காலமாக கேழ்வரகு, கம்பு, கோதுமை உள்ளிட்ட தானிய உணவு வகைகளை பொதுமக்கள் விரும்பி சாப்பிட துவங்கியுள்ளனர். மேலும், அஸ்கா என அழைக்கப்படும், உடலுக்கு கேடு விளைவிக்கும் வெள்ளை சர்க்கரைக்கு பதிலாக, பனை

வெல்லம், கரும்பில் இருந்து நேரிடையாக தயாரிக்கப்படும் நாட்டு சர்க்கரை உள்ளிட்ட இனிப்பு வகைகளுக்கும் மக்கள் மத்தியில் கிராக்கி ஏற்பட்டு வருகிறது.

இந்நிலையில், கரூர் மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் உள்ள டீ கடைகளில், சமீப காலமாக வெள்ளை சர்க்கரைக்கு பதிலாக, நாட்டு சர்க்கரையை டீ, காபி வகைகளில் பயன்படுத்த துவங்கியுள்ளனர். இதை, பொதுமக்களும் விரும்பி குடித்து வருகின்றனர். இதனால், வெள்ளை சர்க்கரை கலந்த, 'டீ' யை விட, நாட்டு சர்க்கரை கலந்த, 'டீ' க்கு அதிக விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

இதுகுறித்து, டீ கடை உரிமையாளர்கள் சிலர் கூறியதாவது: சர்க்கரை நோயாளிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. சர்க்கரை இல்லாத, 'டீ', குறைவான சர்க்கரையுடன், 'டீ' என வாடிக்கையாளர்கள் கேட்டு வாங்கி பருகுகின்றனர். இதனால், வெள்ளை சர்க்கரைக்கு பதிலாக, நாட்டு சர்க்கரை கலந்த, 'டீ' விற்பனை அதிகரித்துள்ளது. வெள்ளை சர்க்கரையை விட, நாட்டு சர்க்கரை உடலில் குறைவான குளுக்கோசை கிரகிக்கும். இனிப்பு தன்மையும் குறைவாக இருக்கும். நாட்டு சர்க்கரைக்கு ஏற்பட்டுள்ள கிராக்கியால், ஒரு கிலோ நாட்டு சர்க்கரை, 80 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. ஆனால், ஒரு கிலோ வெள்ளை சர்க்கரை, 35 ரூபாய் முதல், 40 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. இதனால், வெள்ளை சர்க்கரை, 'டீ', 10 ரூபாய்க்கும், நாட்டு சர்க்கரை கலந்த, 'டீ', 12 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது. இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

## தீவுகளில் மட்டுமே வளரும் அரிய வகை குன்னி மரம்

கீழக்கரை:கீழக்கரை அருகே தீவுகளில் மட்டுமே வளரும் குன்னிமரங்களை பறவைகள் மொய்க்க துவங்கியுள்ளது.கீழக்கரை வனச்சரகத்திற்குட்பட்ட மன்னார் வளைகுடா பகுதியில் வாலைத்தீவு, தலையாரித்தீவு, முல்லைத்தீவு, அப்பாதீவு, ஆனைப்பார் தீவு, வாலிமுனைத்தீவு, பூவரசம்பட்டி தீவு என, 7 தீவுகள் உள்ளன. இந்த தீவுகளில் 300க்கும் அதிகமான குன்னி மரங்கள் வளர்ந்துள்ளது. இதன் தாவரவியல் பெயர் சாலிடேரா என்பதாகும். இவ்வகை மரங்களின் அதிகபட்ச உயரம் 10 அடியாகும். நிழல் தருவதற்கு ஏற்றாற் போல் குடை போன்று வளரும் தன்மைகொண்டது. இலைகளில் உப்பு சுவையுடன் கூடிய அதிக நீர்ச்சத்து உள்ளது. <இந்த மரங்களில் இளஞ்சிவப்பு நிறத்தில் காய்கள் காய்க்கும். இவற்றை சிட்டு, மைனா, கிளி உள்ளிட்ட பறவைகள் விரும்பி உண்ணுகிறது. உ.பி., உள்ளிட்ட சில மாநிலங்களில் குன்னிமர காய்களிலிருந்து ஆயுர்வேத ஆயில் தயாரிக்கப்படுகிறது.

வனச்சரக அலு<வலர் ஒருவர் கூறுகையில்,"" தீவுப்பகுதிகளில் மட்டுமே குன்னி மரம் வளரும். உப்புக்காற்றை தாங்கி வளரும் தன்மை கொண்டது. உப்பு தண்ணீர் போதுமானது. கடல் அரிப்பில் இருந்து இதன் வேர்கள் பாதுகாக்கின்றன. காற்றுத்தடுப்பானாகவும் திகழ்கிறது. இவ்வகை மரங்களை ஆற்றாங்கரை கடற்கரை பகுதியில் வனத்துறை சார்பில் நடபட்டுள்ளது," என்றார்.

## பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க வலியுறுத்தல்

ராமநாதபுரம்: போதிய மழை இல்லாததால் விவசாயம் பாதிக்கப்பட்ட விவசாயி களுக்கு நிவாரணம் வழங்க தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் வலியுறுத்தி உள்ளது.

அதன் மாவட்டக் குழு கூட்டம் ராமநாதபுரத்தில் நடந்தது. மாவட்டத் தலைவர் முருகேசன் தலைமை வகித்தார். மாவட்டச் செயலாளர் முத்துராமு முன்னிலை வகித்தார். நிர்வாகிகள் ஜெயராஜ், நாகநாதன் பங்கேற்றனர்.

போதி மழை இல்லாததால் திருவாடானை, மங்கலகுடி, ஆனந்தூர், சோழந்தூர், ஆர்.எஸ்.மங்கலம், தேவி பட்டினம், நயினார்கோவில், கிளியூர் பகுதிகளில் 40 ஆயிரம் எக்டேரில் நெற்பயிர்கள் கருகிவிட்டன. பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.25 ஆயிரம் வீதம் நிவாரணம் வழங்க வேண்டும். பயிர் இன்சூரன்ஸ் திட்டத்தில் இழப்பீடு தர வேண்டும்.

மாவட்டத்தில் 1,200 கண்மாய்கள் 30 ஆண்டுகளாக தூர்வாரப்படாமல் உள்ளன. கால்வாய்களை சீமைகருவேல மரங்கள் ஆக்கிரமித்துள்ளன. இதனால் மழை பெய்தாலும் கண்மாய் நிரம்புவதில்லை. கண்மாய், கால்வாய்களை தூர்வார வேண்டும். இந்த கோரிக்கைகளை வலியுறுத்தி பிப்., 10 (இன்று)ல் தேவிபட்டினத்திலும், பிப்., 19 ல் நயினார்கோவிலிலும், பிப்., 23 ல் திருவாடானையிலும் ஆர்ப்பாட்டம் நடத்த கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

## பயிர் பாதுகாப்பு பயிற்சி முகாம்

சிங்கம்புணரி:சிங்கம்புணரி வட்டார விவசாயிகளுக்கு தோட்டக்கலை பயிர் பாதுகாப்பு பயிற்சி முகாம் நடந்தது. வட்டார விவசாயிகள்பங்கேற்றனர். கத்தரி, தக்காளி, வெண்டை, காய்கறிகள், பச்சை மிள காய் பல ரக காய்கறிகள், மா, கொய்யா சப்போட்டா பழங்கள், மல்லிகை, முல்லை, சம்பங்கி, கனகாம்பர பூக்கள் இறவை பாசன வசதியுள்ள விவசாயிகள் சாகுபடி செய்கின்றனர்.ஒருங்கிணைந்த முறையில் பூச்சிகொல்லி, பூஞ்சாண மருந்துகள் தெளித்து பயிரை பாதுகாப்பதுபற்றி பயிற்சியளிக்கப்பட்டன. குன்றக்குடி வேளாண் அறிவியல் மைய தலைவர் செந்தில்குமரன்,தோட்டக்கலை துறை உதவி இயக்குனர் ராஜமூர்த்தி, வேளாண் அலுவலர் செல்வராஜ் பங்கேற்றனர்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

## ரயில் பயணிகளுக்கு 25 வகையான டீ



புதுடெல்லி: ரயிலில் பயணம் செய்யும் பயணிகளுக்காக 25 வகையான தேனீர் விற்பனை செய்ய இந்திய ரயில்வே உணவு மற்றும் சுற்றுலா கழகம் (ஐஆர்சிடிசி) முன்வந்துள்ளது. தேசி சாய், ஆம் பப்பட் சாய், அரிமிர்ச் சாய், குல்ஹாட் சாய், அட்ரக் துளசி சாய், தேன், இஞ்சி, லெமன் போன்ற வகைகளிலும் தேனீர் விற்பனை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் ரயில் பயணிகளின் வசதிக்காக எந்த இடத்தில் தேனீர் தேவை என்பதை பயணிகள் தெரிவிக்கும் வகையில் மொபைல் ஆப்ஸ் வசதியும் துவக்கப்பட்டுள்ளது.

## காய், கனி உற்பத்தியாளர் நிறுவனத்திற்கு பதிவு சான்றிதழ் வழங்கும் நிகழ்ச்சி

மதுராந்தகம் : மதுராந்தகத்தை அடுத்த இல்லீடு கிராமத்தில் தேசிய வேளாண் நிறுவனம் அமைந்துள்ளது. இந்நிறுவனத்தின் சார்பில் கிராமப்புற விவசாயிகளை முன்னேற்றும் வகையில், பல்வேறு விவசாய மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதன் ஒரு பகுதியாக காய், கனி பயிரிடும் ஆயிரம் விவசாயிகளை ஒருங்கிணைத்து, அவர்கள் விளைவிக்கும் பொருட்களை அவர்களே நேரடியாக விற்பனை செய்து, கூடுதல் லாபம் பெறும் நோக்கில் 'காய், கனி உற்பத்தியாளர் நிறுவனம்' என்ற அமைப்பு ஏற்படுத்தப்பட்டு உள்ளது.

தேசிய வேளாண் நிறுவனமும் நபார்டு வங்கியும் இணைந்து செயல்படுத்தும் இந்த அமைப்புக்கு நபார்டு வங்கி நிதியுதவி வழங்குகிறது. இந்த காய், கனி உற்பத்தியாளர் நிறுவனத்திற்கு பதிவு சான்றிதழ் வழங்கும் நிகழ்ச்சி தேசிய வேளாண் நிறுவனத்தில் நடைபெற்றது. இதில் நபார்டு வங்கி பொது மேலாளர் வெங்கடேஸ்வர ராவ் கலந்துகொண்டு, அந்நிறுவனத்துக்கு பதிவு சான்றிதழை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் வேளாண் நிறுவன இயக்குநர் முருகன், திட்ட ஒருங்கிணைப்பாளர் கஜா, நபார்டு வங்கி துணை பொதுமேலாளர்கள் ராகவன், பிரபாகரன், மேத் கிசான், செயல் இயக்குநர் சுரேஷ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## பறவை காய்ச்சல் ஆராய்ச்சி மையத்தை நாமக்கல்லில் ஏற்படுத்த வேண்டும்

ஈரோடு, : பறவை காய்ச்சல் ஆராய்ச்சி மையத்தை நாமக்கல்லில் ஏற்படுத்த வேண்டும் என்று ொகாமதேக மாநாட்டில் வலியுறுத்தப்பட்டது. கொங்குநாடு மக்கள் தேசிய கட்சியின் மாநாடு ஈரோடு சித்தோட்டில் நேற்று முன்தினம் நடந்தது. மாநாட்டில் மாநில அவைக்தலைவர் பி.ஆர். சென்னியப்பன் முன்னிலை வகித்தார். மாநாட்டுக்குழு தலைவர் மற்றும் தெற்கு மாவட்ட செயலாளர் ஈஸ்வரமூர்த்தி வரவேற்றார். மாநாட்டில் கொங்கு வேளாளர் கவுண்டர்கள் பேரவை தலைவர் தேவராசன் பேசும் போது, உலகின் எந்த பகுதியில் பறவைக்காய்ச்சல் நோய் தாக்கியதாக தகவல் வந்தாலும் முதலில் நாமக்கல் மாவட்டத்தை சேர்ந்த கோழிப் பண்ணையாளர்கள் தான் பாதிக்கிறார்கள். இப்பிரச்னைக்கு நிரந்தர தீர்வு காண மத்திய பிரதேசம் போபாலில் உள்ள பறவை காய்ச்சல் நோய்க்கான ஆராய்ச்சி

மையத்தை தமிழகத்தில் நாமக்கல்லில் ஏற்படுத்த முன்வர வேண்டும். இவ்வாறு தேவராசன் பேசினார். தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்க தலைவர் கே.பி.கே.செல்வராஜ் பேசுகையில், சமுதாயத்தின் வளர்ச்சிக்காக கொமதேகவுடன், செங்குந்த முதலியார் அமைப்பும் இணைந்து பாடுபடும், என்றார். மாநாட்டில் மாநில தலைமை நிலைய செயலாளர் சூரியமூர்த்தி, மாநில பொருளாளர் கே.கே.சி.பாலு, பேரவை பொருளாளர் அம்மையப்பன், மாநில துணை பொது செயலாளர்கள் சக்தி நடராஜ், சேலம் தங்கவேல், மாநில விவசாய அணி துணை செயலாளர் கோபால்சாமி, மாநில மருத்துவர் அணி செயலாளர் டாக்டர் சதாசிவம், சென்னை கொங்கு நண்பர்கள் சங்க செயலாளர் ரமேஷ், மகளிர் அணி விஜயலட்சுமி, சாந்தி, தங்கமணி, மாநில இளைஞரணி செயலாளர் இளம்பரிதி, துணைச்செயலாளர் டி.எஸ்.சந்திரசேகர் உட்பட பலர் பேசினர்.

கொள்கை பரப்பு செயலாளர் கந்தசாமி, ஏஈடி பள்ளி தாளாளர் காசியண்ண கவுண்டர், மாவட்ட செயலாளர்கள் சிவராஜ் (ஈரோடு மேற்கு), துரை.ராஜா (ஈரோடு வடக்கு), ஜெகநாதன் (ஈரோடு மாநகரம்), கோவை மாநகரம் கார்த்திக், கோவை வடக்கு ராஜேந்திரன், கோவை தெற்கு நித்தியானந்தன், கோவை மேற்கு குழந்தைவேலு, கிழக்கு மாணிக்கராஜ், திருப்பூர் மாநகரம் ரோபோ ரவிச்சந்திரன், வடக்கு லோகநாதன், தெற்கு ரகுபதி ராகவன், திருப்பூர் புறநகர் சக்திவேல், திருப்பூர் கிழக்கு சுப்ரமணி, சேலம் கிழக்கு டி.கே.எஸ்.ரமேஷ், சேலம் தெற்கு சரவணன், ஈரோடு கிழக்கு மாவட்ட செயலாளர் சுரேஷ் பொன்னுவேல் நன்றி கூறினார். மாநாடு துவங்குவதற்கு முன்னதாக இரு சக்கர பேரணியை தலைமை நிலைய செயலாளர் சூரியமூர்த்தி துவக்கி வைத்தார். ஈரோடு மேற்கு மாவட்ட செயலாளர் சிவராஜ், வடக்கு மாவட்ட செயலாளர் துரை.ராஜா முன்னிலையில் நடந்த இந்நிகழ்ச்சியில் நூற்றுக்கணக்கான இரு சக்கர வாகனங்களில் கொமதேக தொண்டர்கள் கொடிகளுடன் ஊர்வலமாக பங்கேற்று மாநாட்டு பந்தலை வந்தடைந்தனர். இவர்களை தொடர்ந்து தமிழர் கலாச்சாரத்தை வலியுறுத்தும் அலங்கார ஊர்திகளின் அணிவகுப்பும் நடந்தது.

**வீட்டு மனைகளாக மாறி வருவதால் சாகுபடி நிலம் குறைந்து வருகிறது**

க.பரமக்தி, : விளை நிலங்கள் வீட்டு மனைகளாக மாறி வருவகால் சாகுபடி நிலங்கள் பரப்பளவு குறைந்து வருகிறது என திருச்சி எம்பி சிவா பேசினார்.

க.பரமத்தி ஒன்றிய திமுக சார்பில் செயல்படாத அதிமுக அரசை கண்டித்து பொதுக்கூட்டம் சின்னதாராபுரம் கடைவீதியில் நடைபெற்றது. கூட்டத்திற்கு ஊராட்சி செயலாளர் வடிவேல் வரவேற்றார்.ஒன்றிய செயலாளர் கருணாநிதி தலைமை வகித்தார். முன்னாள் நிர்வாகிகள் இறையரசன், லட்சுமிதுரைசாமி, ஒன்றிய நிர்வாகிகள் அவைத்தலைவர் பழனிச்சாமி, துணை செயலாளர்கள் நல்லசாமி, ராஜாமணிராமலிங்கம், மாவட்ட பிரதிநிதி கருப்புசாமி முக்கிய நிர்வாகிகள் முன்னிலை வகித்தனர். விழாவில் அரவக்குறிச்சி எம்எல்ஏ கே.சி.பழனிசாமி, கரூர் மாவட்ட செயலாளர் நன்னியூர் ராஜேந்திரன், மாநில சட்டத்துறை இணை செயலாளர் மணிராஜ், தலைமை கழக பேச்சாளர் கணேசன் ஆகியோர் வாழ்த்தி பேசினர். இதில் திருச்சி எம்பி சிவா பேசியதாவது:திமுக ஆட்சி காலத்தில் நிம்மதியாக இருந்தோம். இந்த ஆட்சிக்கு தொலை நோக்கு பார்வை இல்லை. தமிழக மக்கள் இலவசங்கள் எந்த ஆட்சி வழங்கினாலும் பெற்றுகொள்வார்கள் ஆனால் உண்ணும் உணவை மட்டும் உழைத்து தான் சாப்பிடும் எண்ணம் படைத்தவர்கள்.குமரி மாவட்டக்கில் 2ஆயிம் ஏக்கர் விளை நிலங்கள் வீட்டு மனைகளாக மாறி வருவதால் சாகுபடி நிலங்கள் பரப்பளவு குறைந்து வருகிறது. திமுக ஆட்சிகாலத்தில் கொண்டு வந்த திட்டங்கள் அனைத்தும் மக்களின் வரவேற்பை பெற்றிருந்ததுதிமுக வெற்றி பாடுபட வேண்டும் என்றார். இதில் மாவட்ட நிர்வாகிகள் மகளிர் அணிஅமைப்பாளர் கலாவதி சக்திவேல், ரமேஷ்பாபு, மகேஸ்வரி உள்ளிட்ட மாவட்ட ஒன்றிய கிளை கழக நிர்வாகிகள், சார்பு அணிகள் நிர்வாகிகள் உள்பட கட்சியை சேர்ந்த ஏராளமானோர் கலந்து கொண்டனர். முடிவில் ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் சுப்பிரமணி நன்றி கூறினார்.

## பயறுவகைகளில் பயிர் மேலாண்மை பயிற்சி

பொன்னமராவதி : பொன்னமராவதி அருகே திருக்களம்பூர் ஊராட்சி கருப்புகுடிப்பட்டியில் அட்மா திட்டத்தின் மூலம் பயறுவகை பயிர்களில் பயிர் மேலாண்மை குறித்த ஒருநாள் பயிற்சி நடந்தது.

இப்பயிற்சிக்கு பொன்னமராவதி வேளாண் உதவி இயக்குநர் ஜெயபாலன் தலைமை வகித்தார். ஒன்றியக்குழு உறுப்பினர் சிவசாமி ஊராட்சித்தலைவர் பழனிச்சாமி, கூட்டுறவு சங்கத்தலைவர் ராஜமாணிக்கம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பயறு வகை பயிர்களின் உற்பத்தியை பெருக்குவதற்கான ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை தொழில்நுட்பங்கள் குறித்து வேளாண் அலுவலர் கவிதா பயிற்சியளித்தார். பயிறு வகை பயிர்களைத் தாக்கும் பூச்சிகள் மற்றும் நோய்களை பற்றியும் அதனைக் கட்டுப்படுத்தும் முறைகள் குறித்தும் வட்டார தொழில்நுட்பமேலாளர் தேவி பயிற்சியளித்தார். பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் ராஜூ மற்றும் பிரியங்கா ஆகியோர் செய்திருந்தனர். முன்னதாக உதவி வேளாண் அலுவலர் அருளானந்தம் வரவேற்றார். உதவி வேளாண் அலுவலர் குமாரசாமி நன்றி கூறினார்.

## விதை கிராம திட்ட பயிற்சி

பட்டுக்கோட்டை, : பட்டுக்கோட்டை வட்டாரம் புதுக்கோட்டை உள்ளூர் கிராமத்தில் வேளாண்மைத்துறையின் கீழ் செயல்படும் விரிவாக்க சீரமைப்புத் திட்டத்தின் கீழ் (அட்மா) பயிர் வகை பயிர்களின் விதை கிராம திட்ட பயிற்சி நடந்தது. முன்னோடி விவசாயிகள் 40 பேர் கலந்து கொண்டனர். ஊராட்சி தலைவர் வெங்கடாச்சலம் தலைமை வகித்தார். பட்டுக்கோட்டை வேளாண்மை அலுவலர் வெங்கடாச்சலம் வரவேற்றார். வேளாண்மை உதவி இயக்குநர் சுப்பையா சிறப்புரையாற்றினார்.

பயிற்சியில் தஞ்சாவூர் விதை அலுவலர் ராஜேந்திரன், விதை உற்பத்தி செய்யும் முறை பற்றியும், விதைப்பண்ணை அமைப்பதற்கான

வழிமுறைகளையும், உளுந்து சாகுபடி செய்வதற்கான தொழில் நுட்பங்களையும் எடுத்துக் கூறினார். தஞ்சாவூர் வேளாண்மை துணை இயக்குநர் இளஞ்செழியன், பயிர் வகை பயிர்கள் சாகுபடி செய்யும் தொழில்நுட்பங்கள், உளுந்து ரகங்கள் பற்றி எடுத்துக் கூறினார். வேளாண்மை உதவி அலவலர் ஜெயபாரதி நன்றி கூறினார்.

## சணப்பை விதை உற்பத்தி தொழில்நுட்ப பயிற்சி

திருவிடைமருதூர், : திருவிடைமருதூர் அடுத்த ஆடுதுறையில் தமிழ்நாடு நெல்ஆராய்ச்சி நிலையமும், கொல்கத்தாவில் இயங்கி வரும் சணல் மற்றும் சார்பு நார் பயிர்கள் ஆராய்ச்சி நிலையமும் இணைந்து விவசாயிகளுக்கான சணப்பை பயிரில் விதை உற்பத்தி தொழில் நுட்பங்கள் பற்றிய ஒரு நாள் பயிற்சியை ஆடுதுறை நெல் ஆராய்ச்சி நிலையத்தில் நடத்தியது. நெல் ஆராய்ச்சி நிலையத்தின் இயக்குநர் (பொ) முனைவர் ரவி பயிற்சியை தொடங்கி வைத்து பேசும்போது, விவசாயத்திற்கு மண் தான் ஆதாரம். எனவே மண் வளத்தை பேணி காப்பது விவசாயிகள் கடமை. வேதியியல், பவுதீகம் மற்றும் உயிரியல் குணாதியங்களை கொண்ட மண்ணானது ஒரு உயிருள்ள பொருள். இயற்கை உரம் மண்ணுக்கு, செயற்கை உரம் பயிருக்கு என்ற கூற்றுக்கிணங்க மண் வளத்திற்கு இயற்கை உரத்தையும், செயற்கை உரத்தையும் சரியான அளவில் சேர்த்து அளிக்க வேண்டும்.

குளத்து மண் மற்றும் எரு இன்றைய கால கட்டத்தில் குறைவாக அளிப்பதால் அதனை ஈடுகட்டும் வகையில் மண் வளத்தை பாதுகாக்க பசுந்தாள் உரம்தான் ஒரே வழி. இரு மண் பாங்கான நிலத்திற்கு சணப்பு பயிர்களையும், பிரச்சனைக்குரிய மண்ணிற்கு தக்க பூண்டினையும் பயிரிட வேண்டும். பூக்கும் தருணத்திற்கு முன்பாக அவற்றை நிலத்தில் மடக்கி உழும்போது நிலத்திற்கு அதிக ஊட்டச்சத்துக்கள் கிடைக்கும். உழவர்கள் சணப்பை விதை உற்பத்தி பற்றி அறிந்து கொள்வதற்காக இப்பயிற்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் விவசாயிகள் தங்களுக்கு தேவைப்படும் சணப்பை விதையை உற்பத்தி செய்து

கொள்வது மட்டுமல்லாமல் பிறருக்கும் வழங்க வேண்டும் என்றார். மரபியல் துறை விஞ்ஞானி முனைவர் நடராஜன், சணப்பை விதை தொழில் நுட்பங்கள் பற்றி விளக்கமளித்து, தரமான விதை உற்பத்தி சணப்பை பயிர் அபிவிருத்திக்கு மிகவும் அத்தியாவசியம் என்றார்.

விதை நுட்பவியல் முனைவர் பேராசிரியர் கிருஷ்ணவேணி, சணப்பையில் விதை உற்பத்தி தொழில் நுட்பங்களை விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார். உதவி பேராசிரியர் முனைவர் சசிகுமார் நன்றி கூறினார்.

## அறுவடை இயந்திரம் குறைந்த வாடகையில் வழங்க வலியுறுத்தல்

திருவிடைமருதூர், : தஞ்சை, நாகை, திருவாரூர் உள்ளிட்ட டெல்டா மாவட்டங்களில் தற்போது நெல் அறுவடை மும்முரமாக நடைபெற்று வருகிறது. இதில் திருவிடைமருதூர் மற்றும் திருப்பனந்தாள், கும்பகோணம், பாபநாசம், அம்மாபேட்டை என தஞ்சை மாவட்டத்தில் மொத்தம் சுமார் 1 லட்சத்து 36ஆயிரம் எக்டேர் பரப்பளவு விவசாய சாகுபடி நிலங்கள் உள்ளன. திருவாரூர் மாவட்டத்தில் மொத்த சாகுபடி நிலங்கள் 1 லட்சத்து 57 ஆயிரமும், நாகை மாவட்டத்தில் 1 லட்சத்து 92ஆயிரம் ஹெக்டேரும் உள்ளது. நாகை மாவட்டத்தில் நாகை மற்றும் மயிலாடுதுறை, திருவாரூரில் திருவாரூர் மற்றும் மன்னார்குடி, தஞ்சை மாவட்டக்கில் தஞ்சை, கும்பகோணம், பட்டுகோட்டை ஆகிய பகுதிகளில் அரசு வேளாண்மை பொறியியல் துறை அலுவலகம் செயல்பட்டு வருகிறது.

இங்கிருந்து விவசாயிகள் உழவு பணிக்கு டிராக்டர், அறுவடை இயந்திரம், சமன்படுத்தும் கருவியான லேசர் இயந்திரம் ஆகியவற்றை குறைந்த வாடகைக்கு எடுத்து பயன்பெற்று வருகின்றனர். அந்த வகையில் உழவு செய்வதற்கு டிராக்டருக்கு மணிக்கு ரூ.340ம், அறுவடை இயந்திரத்திற்கு பெல்ட் இயந்திரத்திற்கு மணிக்கு ரூ.1,415ம், டயர் பொருத்தப்பட்ட அறுவடை இயந்திரத்திற்கு ரூ.875ம், சமன்படுத்தும்

லேசர் கருவி பொருத்தப்பட்ட இயந்திரம் ரூ.340ம் வாடகை வசூலிக்கப்படுகிறது. இந்த இயந்திரங்களை தனியாரில் வாடகைக்கு எடுத்தால் 100 சதவீதம் முதல் 150 சதவீதத்திற்கு மேல் கூடுதல் செலவாகும்.

திருவாரூர் மற்றும் மன்னார்குடி பொறியியல் துறைக்கு தலா 1 டயர் பொருத்தப்பட்ட அறுவடை இயந்திரமும், பெல்ட் பொருத்தப்பட்ட அறுவடை இயந்திரம் தலா 2ம் என மொத்தம் 6ம், நாகை மற்றும் மயிலாடுதுறையில் தலா 1 பெல்ட் அறுவடை இயந்திரமும், 1 டயர் பொருத்தப்பட்ட அறுவடை இயந்திரமும், இதே போல் தஞ்சையில் டயர் பொருத்தப்பட்ட ஒரு அறுவடை இயந்திரமும், கும்பகோணத்தில் பெல்ட் பொருத்தப்பட்ட ஒரு அறுவடை இயந்திரமும், பட்டுகோட்டையில் பெல்ட் பொருத்தப்பட்ட அறுவடை இயந்திரமும் என மொத்தத்தில் 3ம் தற்போதுஉள்ளது.

தற்போதுள்ள அறுவடை இயந்திரத்தை கொண்டு 5 முதல் 8 சதவீத விவசாயிகள் மட்டுமே பயன்பெற முடியும். அதுவும் அரசியல் செல்வாக்குள்ளவர்கள் மட்டுமே பயன்பெற்று வருவதாக விவசாயிகள் வேதனையுடன் தெரிவிக்கின்றனர். மாவட்ட நிர்வாகம் தனியார் வாடகைக்கு விடும் டயர் பொருத்தப்பட்ட அறுவடை இயந்திரத்திற்கு அதிகபட்சமாக ஒரு மணிக்கு ரூ.1,250ம், பெல்ட் பொருத்தப்பட்ட இயந்திரத்திற்கு மணிக்கு ரூ.1,800 மட்டுமே வாங்க வேண்டும் என உத்தரவு பிறப்பித்துள்ளது. ஆனால் தற்போது அறுவடை சூடு பிடித்துள்ள நிலையில் டயர் வண்டிக்கு மணிக்கு ரூ.1,600ம், பெல்ட் வண்டிக்கு ரூ.2,100ம் கட்டணம் வசூலிக்கின்றனர். இதனை கட்டுப்படுத்தவும், விவசாயிகள் குறைந்த வாடகையில் பயன்பெறவும் 3 மாவட்டங்களில் உள்ள ஒவ்வொரு வேளாண்மை பொறியியல் துறை அலுவலகத்திற்கும் 20 முதல் 30 வரை அறுவடை இயந்திரத்தை தமிழக அரசு வழங்கி லாபமே இல்லாத இந்த விவசாய தொழிலை மேம்படுத்த தனி கவனம் செலுத்த வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர்.

## கால்நடை மருத்துவக்கல்லூரியில் நெருப்புக் கோழிகள் பிரிவு துவக்கம்

ஒரத்தநாடு : ஒரத்தநாடு கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் நெருப்புக் கோழிகள் பிரிவு துவக்க விழா நடைபெற்றது. கல்லூரி முதல்வர் செல்வக்குமார் பிரிவை திறந்து வைத்தார்.

தமிழ்நாட்டில் இதுவரை காட்டுப்பாக்கம் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக நெருப்புக்கோழி பண்ணை, வண்டலூர் உயிரியல் பூங்கா மற்றும் நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி ஆகிய இடங்களில் மட்டுமே நெருப்புக் கோழிகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

இப்பிரிவு இங்கு துவங்கப்பட்டுள்ளதையடுத்து பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள், டெல்டா மாவட்ட பொதுமக்களும்; இதனால் பயனடைவர் என கல்லூரி முதல்வர் தெரிவித்தார். மேலும் கால்நடை மேலாண்மை பற்றிய ஆராய்ச்சிகள் மற்றும் கால்நடை மருத்துவ பட்ட படிப்பு மாணவர்களின் பயிற்சி ஆகியவற்றிற்கும் இப்பிரிவு பயன்படும் என்றார்.

## கோழிக்கழிச்சல் தடுப்பூசி முகாம்

தஞ்சை, : தஞ்சை மாவட்டத்தில் இன்று (9ம் தேதி) முதல் வரும் 22ம் தேதி வரை கோழிக்கழிச்சல் தடுப்பூசி முகாம் நடைபெற உள்ளது.

நடப்பாண்டில் தஞ்சை மாவட்டத்தில் 1.50 லட்சம் கோழிகளுக்கு தடுப்பூசி பணி மேற்கொள்வதற்கு இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதன்படி தஞ்சை மாவட்டத்தில் இன்று முதல் (9ம் தேதி) வரும் 22ம் தேதி வரை இரு வாரத்திற்கு அனைத்து கிராமங்களிலும் தடுப்பூசி முகாம் நடத்தப்பட உள்ளது என கலெக்டர் சுப்பையன் தெரிவித்துள்ளார்.

## நடமாடும் கொள்முதல் நிலையங்களை விவசாயிகள் தொடர்பு கொள்ளலாம்

திருவாரூர், : திருவாரூர் மாவட்டத்தில் 200 மூட்டைகளுக்கு மேல் நெல் வைத்துள்ள விவசாயிகள், நடமாடும் கொள்முதல் நிலையங்களை பயன்படுத்தி கொள்ளலாம். திருவாரூர் மாவட்டத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தால் 433 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. மேலும் தற்போது தாலுகாவுக்கு ஒரு நடமாடும் கொள்முதல் நிலையங்கள் என 7 நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளது. நடமாடும் கொள்முதல் நிலையங்களின் மூலம் நெல் விற்பனை செய்ய விரும்பும் விவசாயிகள் தங்களிடம் 200 மூட்டைகளுக்குமேல் இருக்கும்பட்சத்தில் திருவாரூர்-மன்னார்குடி சாலையில் இயங்கி வரும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக முதுநிலை மண்டல மேலாளர் அலுவலகத்தில் தங்களது பெயர், இடம், கைபேசி எண் ஆகிய தகவல்களை தொலைபேசி 04366-222542 மூலமாக பதிவு செய்து கொள்ளலாம். முன்னுரிமை அடிப்படையில் தங்களை அணுகி மூட்டைகளின் எண்ணிக்கை, நெல்லின் தரம் மற்றும் சிட்டா அடங்கல் ஆகியவற்றை சரிபார்க்க பின் துணை மேலாளர்கள் திருவாரூர் மற்றும் மன்னார்குடி மூலமாக தங்களது நெல் கொள்முதல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். விவசாயிகள் தங்களது நெல்லை நடமாடும் நெல் கொள்முதல் நிலையங்களின் மூலம் விற்பனை செய்து பயனடையலாம். இவ்வாறு மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.

**வயிற்றுகோளாறை சரிசெய்யும் சுக்குமல்லி பானம்**




வயிற்று கோளாறு, செரிமான பிரச்னைகள் போன்றவற்றை தீர்க்க கூடியதாக இந்த பானங்கள் உள்ளன. சுக்கு மல்லி பானம் தயாரிக்க தேவையான பொருட்கள்: சுக்கு பொடி, மல்லி விதைப்பொடி, நாட்டு சர்க்கரை, காய்ச்சிய பால். கால் ஸ்பூன் சுக்குப் பொடி, அரை மல்லி விதைப்பொடி, சிறிது நாட்டு சர்க்கரை சேர்க்கவும். இதில், ஒரு டம்ளர் நீர் விட்டு கொதிக்க வைத்து வடிகட்டவும்.

இதனுடன் சிறிது பால் சேர்த்து குடிக்கலாம். இது உள் உறுப்புகளை தூண்டக் கூடியதாக உள்ளது. உடல் வலியை குறைக்கும். வயிற்று கோளாறுகளை சரிசெய்யும். பல்வேறு நன்மைகளை கொண்ட தனியா, சிறுநீரை வெளியேற்றும். உள் உறுப்புகளுக்கு குளிர்ச்சியை கொடுக்கும். காலையில் காபி, டீக்கு பதிலாக சுக்குமல்லி பானத்தை குடித்துவர செரிமான சக்தி அதிகரிக்கும். வயிற்று புண்கள் ஆறும். மலச்சிக்கல் இல்லாமல் போகும். அற்புதமான பானமாகவும், உடலுக்கு ஆரோக்கியம் தருவதாகவும் சுக்குமல்லி பானம் பயன்படுகிறது.

லவங்கம், மிளகு, சீரகத்தை பயன்படுத்தி கொழுப்பை குறைக்கும் பானம் தயாரிக்கலாம். இதற்கு தேவையான பொருட்கள்: லவங்கப் பட்டை,

லவங்கம், மிளகு, சீரகம், ஏலக்காய், பனங்கற்கண்டு. 5 முதல் 10 மிளகு, ஒரு துண்டு லவங்க பட்டை, ஒரு ஏலக்காய், 5 லவங்கம், கால் ஸ்பூன் சீரகம் ஆகியவற்றை லேசாக தட்டி எடுத்துக்கொள்ளவும். இதனுடன் சிறிது பனங்கற்கண்டு சேர்த்து, ஒரு டம்ளர் தண்ணீர் விட்டு கொதிக்க வைக்க வேண்டும். இதை வடிக்கட்டி குடிப்பதால் உடல் எடை குறையும். உடலில் உள்ள கொழுப்பை குறைக்கும்.

ரத்த அழுத்தத்தை தடுக்கும். மணத்தை தரக்கூடியதாக உள்ள இந்த பானம் பல்வேறு நோய்கள் வராமல் தடுக்கும். எலுமிச்சை புல்லை பயன்படுத்தி உடல் வலியை போக்கும் பானம் தயாரிக்கலாம். இதற்கு தேவையான பொருட்கள்: எலுமிச்சை புல், இஞ்சி, தேன்.எலுமிச்சை புல்லை துண்டுகளாக்கி எடுத்துக்கொள்ளவும். இதனுடன் இஞ்சியை தட்டி போடவும். ஒரு டம்ளர் நீர்விட்டு கொதிக்க வைக்கவும். இதை வடிகட்டி தேன் சேர்த்து குடித்தால், ரத்தம் சுத்தமாகும். நோய் எதிர்ப்பு சக்திஅதிகரிக்கிறது.

செரிமானத்தை தூண்டுகிறது. ரத்த ஓட்டத்தை சீர்செய்கிறது. உடல் வலியை போக்குகிறது. வீக்கத்தை கரைக்கிறது. வாசனை புல் என்று அழைக்கப்படும் எலுமிச்சை புல்லில் பல்வேறு மருத்துவ குணங்கள் உள்ளன. இதை காய வைத்து பயன்படுத்தலாம். எலுமிச்சை போன்ற வாசனையை கொண்டது. புல் வகையை சார்ந்தது.

**பசியை தூண்டும் இலந்தை பழம்**




இலந்தை பழம் பல்வேறு மருத்துவ குணங்களை கொண்டது. புளிப்பு, இனிப்பு சுவை உடையது. வயிற்று கோளாறுக்கு அற்புத மருந்தாகிறது. செரிமானத்தை தூண்டுகிறது. புரதம், கால்சியம் உள்ளிட்ட சத்துக்கள் கொண்டது. ஜனவரி, பிப்ரவரி, மார்ச் ஆகிய மாதங்களில் அதிகளவில் கிடைக்கும். சிறு இலந்தையை பயன்படுத்தி சுவையின்மை, பசியின்மைக்கான மருந்து தயாரிக்கலாம்:

தேவையான பொருட்கள்: இலந்தை பழம், உப்பு, நாட்டு சக்கரை, காய்ந்த மிளகாய். 10 இலந்தை பழத்தை நசுக்கி எடுக்கவும். இதனுடன் காய்ந்த மிளகாய் பாதியளவு எடுத்து விதைகளை நீக்கிவிட்டு சேர்க்கவும். சிறிது உப்பு, நாட்டு சர்க்கரை, ஒரு டம்ளர் நீர்விட்டு கொதிக்க வைக்கவும். இதை வடிகட்டி குடிக்கும்போது பசியின்மை சரியாகும். உடல் புத்துணர்ச்சி ஏற்படும். பசியை தூண்டும். செரிமானத்தை உண்டாக்கும். இலந்தை பழத்தை பயன்படுத்தி இலந்தை அடை தயாரிக்கலாம்.

இலந்தை பழத்தின் கொட்டையை நீக்கி எடுக்கவும். இதனுடன் சிறிது நாட்டு சக்கரை, உப்பு, காய்ந்த மிளகாய் சேர்த்து பிசையவும். அடைகளாக தட்டி வெயிலில் காய வைத்து எடுக்கவும். இதை

நெல்லிக்காய் அளவுக்கு வெறும் வயிற்றில் சாப்பிட்டுவர செரிமானம் தூண்டப்படும். பசியின்மையை போக்குவது மட்டுமின்றி, பித்தத்தை சரிசெய்யும். வயிறு உப்புசம், குமட்டல் குணமாக்கும். இலந்தை பழத்தை கொண்டு சளி, இருமல், உடல் சோர்வுக்கான மருந்து தயாரிக்கலாம்.

5 இலந்தை பழம் நசுக்கி எடுக்கவும். சிறிது மிளகு, சுக்கு சேர்த்து ஒரு டம்ளர் தண்ணீர் ஊற்றி கொதிக்க வைக்கவும். வடிகட்டி தேன் சேர்த்து குடிக்கும்போது நெஞ்சக சளியை கரைந்து வெளியேறும். இருமல் தணியும். பித்த சுரப்பியை சமன்படுத்தும். மலச்சிக்கலை போக்கும். உடலுக்கு குளிர்ச்சி தரக்கூடியது. சோர்வு நீக்கி புத்துணர்வை தருகிறது.

இலந்தை மரத்தின் பட்டை, துளிர் இலைகளை பயன்படுத்தி ஆசனவாயில் ஏற்படும் கடுப்பை குணமாக்கும் மருந்து தயாரிக்கலாம். இலந்தை மரப்பட்டையை துண்டுகளாக எடுத்துக்கொள்ளவும். இதனுடன் இலந்தை இலை பசை சேர்க்கவும். ஒரு டம்ளர் நீர் விட்டு கொதிக்க வைக்கவும். இதை வடிகட்டி தயிர் சேர்த்து கலந்து குடித்தால் குடல் பகுதியில் ஏற்படும் புண்கள் ஆறும். நோய் நீக்கியாக பயன்படுகிறது. நச்சுக்களை வெளியேற்றுகிறது.

ஆசனவாயில் ஏற்படும் கடுப்பை சரிசெய்கிறது. இலந்தை இலையை பயன்படுத்தி புண்களுக்கான மருந்து தயாரிக்கலாம். தேங்காய் எண்ணெயுடன், இலந்தை இலை கொழுந்து பசையை சேர்த்து தைலப்பதத்தில் காய்ச்சவும். ஆற வைத்து வடிகட்டி எடுக்கவும். இதை மேல்பூச்சாக போடும்போது கொப்பளங்கள், நாள்பட்ட கட்டிகளை குணமாக்குகிறது. புண்கள் ஆறும்.

**ரத்த அழுத்தத்தை குறைக்கும் சிறுகண் பீளை**




சிறுகண் பீளை செடி சாலை, ஏரிக்கரை ஓரங்களில் வளரக்கூடியது. சிறுகண் பீளைக்கு பொங்கல் பூ என்ற பெயரும் உண்டு. சிறுநீரை வெளித்தள்ளும் தன்மை கொண்டது. கற்களை கரைக்க கூடியது. சர்க்கரை நோய்க்கு மருந்தாகிறது. நோய் கிருமிகளை அகற்ற கூடியது.சிறுகண் பீளை வேரை பயன்படுத்தி கழிச்சல், சீதக் கழிச்சலுக்கான மருந்து தயாரிக்கலாம். தேவையான பொருட்கள்: வேர், கோரைக் கிழங்கு, சோம்பு, பனங்கற்கண்டு. வேரை நன்றாக சுத்தம் செய்து 3 கிராம் வரை எடுக்கவும். அரை ஸ்பூன் கோரைக் கிழங்கு பொடி, அரை ஸ்பூன் சோம்பு, சிறிது பனங்கற்கண்டு சேர்த்து ஒரு டம்ளர் நீர் விட்டு கொதிக்க வைக்கவும். இதை வடிகட்டி குடித்துவர வயிற்றுப்போக்கு குணமாகும். கழிச்சல், சீத கழிச்சல், உஷ்ணத்தால் ஏற்படும் அடி வயிறு கடுப்பு சரியாகும். சிறுகண் பீளை சாறு பயன்படுத்தி வெள்ளைப்போக்கு பிரச்னைக்கு மருந்து தயாரிக்கலாம்.

இதற்கு தேவையான பொருட்கள்: சிறுகண் பீளை பூ, இலை, மோர். இலை மற்றும் பூவை நன்றாக அரைத்து எடுத்து சாறு எடுக்கவும். 20 மில்லி சாறுடன் அரை டம்ளர் புளிப்பில்லாத மோருடன் சேர்த்து கலக்கவும். இதை குடித்தால் வெள்ளைப்போக்கு பிரச்னை சரியாகும்.

பால்வினை நோய் குணமாகும். சிறுகண் பீளை செடியை பயன்படுத்தி சிறுநீரக கற்களை கரைக்கும் மருந்து தயாரிக்கலாம். ஒருபிடி அளவுக்கு சிறுகண் பீளை பூ, இலை, வேர் எடுக்கவும்.

இதில் ஒரு டம்ளர் நீர் விட்டு கொதிக்க வைக்கவும். இதை வடிகட்டி குடித்தால் சிறுநீரக கற்களை உடைக்கும் அற்புத மருந்தாகிறது. சிறுநீர் தாரையில் ஏற்படும் வலி, ரத்தக் கசிவு குணமாகும். சிறுநீரக கோளாறுகளை சரிசெய்கிறது. ரத்தத்தில் சர்க்கரை அளவை குறைக்கிறது. சிறுகண் பீளை பூக்களை பயன்படுத்தி தலைவலி, உயர் ரத்த அழுத்தத்துக்கான தேனீர் தயாரிக்கலாம். ஒருபிடி அளவுக்கு பூக்கள் மற்றும் இலைகள் எடுக்கவும்.

இதனுடன் சிறிது பனங்கற்கண்டு சேர்த்து ஒரு டம்ளர் நீர் விட்டு கொதிக்க வைத்து வடிகட்டி குடித்தால், முதுகு வலி சரியாகிறது. வீக்கத்தை குறைக்கிறது. வலியை தணிக்கிறது. காய்ச்சலை போக்கும் தன்மை கொண்டது. கொழுப்பு சத்தை குறைக்கும். உயர் ரத்த அழுத்தத்தை குறைக்கிறது.சிறுகண் பீளையை பயன்படுத்தி தோலில் ஏற்படும் எரிச்சலை போக்கும் மருந்து தயாரிக்கலாம்.

சிறுகண் பீளையின் இலை, பூ, தண்டு, வேர் ஆகியவற்றை அரைத்து எடுத்து சாறு எடுக்கவும். இந்த சாற்றை பூசினால் தோலில் ஏற்படும் எரிச்சல் சரியாகும்.பல்வேறு பயன்களை கொண்ட சிறுகண் பீளையானது, தலைவலி, உடல் வலி, படபடப்பு, கை, கால் நடுக்கத்தை சரிசெய்கிறது. சிறுகண் பீளையின் இலை, பூ, வேர் ஆகியவை அற்புத மருத்துவ குணங்களை கொண்டவை.

## ஆக்ரோஷம் பித்தம் தணிக்கும் பழையசோறு!




அடிக்கிற வெயிலுக்கு அன்னமே வேண்டாம் ,வெறும் நீராகாரத்தைக் குடிச்சிட்டு நிம்மதியாக் கிடக்கலாம்சாமி!" -இது வெயில்காலத்தில், வேப்பமரத்தடியில் சர்வசாதாரணமாகக் கேட்கக் கூடியவசனம். இது வெறும் வார்த்தை மட்டுமல்ல 100 சதவிகிதம் உண்மை. 'ஏனென்றால், நீராகாரம் என்கிற பழைய சாதத்தில் தான் அத்தனைசத்துகளும் இருக்கின்றன.

'நம் முன்னோர்கள் வாழ்வோடு இரண்டறக்கலந்தது பழையசாதம். காலையில் ஒரு முட்டிகஞ்சியை, வெங்காயம், பச்சைமிளகாயோடு சேர்த்துக்குடித்துவிட்டு தான் வயலுக்குப் போவார்கள். அவர்களுக்குத் தேவையான உடல் வலிமையையும் சத்தையும் அந்தப்பழஞ்சோறு தான் கொடுத்தது.

'சாதத்தைவடித்து, அதில் தண்ணீர் ஊற்றி வைத்தால், மறுநாள் காலையில் அது பழையசாதம். சாதத்தை அலுமினியம், மண், ஸ்டீல் எனப் பல்வேறு பாத்திரங்களில் வைத்து பின்னர் அதை ஆய்வுக் கூடத்தில் பரிசோதனை செய்ததில் மண்பானை பழையசாதத்தில் தான் நல்ல தரமும் வாசமும் இருந்தது. சாதத்தில் தண்ணீர் ஊற்றி, இரவு முழுவதும் ஊறவிடும் போது அதில்

நுண்ணுயிர்கள்(லாக்டிக்ஆசிட்பாக்டீரியா) வளர்கிறது. லேசாக அமிலத்தன்மையும் உண்டாகும். அதனால் தான் அதில் புளிப்புச் சுவை ஏற்படுகிறது. நுண்ணுயிர்கள், வைட்டமின்களை உருவாக்குவதால், 'பி' வைட்டமின்கள் அதிகரிக்கிறது. புரதமும் மாவுச்சத்தும்(ஸ்டார்ச்) எளிதில் செரிக்கப்படும் தன்மை பெறுகிறது. ஓர் இரவு முழுவதும் ஊறுவதால், அதன் ஊட்டச் சத்துக்கள் அதிகரிக்கப்படுவதுதான், அதன் சத்துக்குக் காரணம்.

சாதம் மீதி இருந்தால் ஃப்ரிட்ஜில் வைத்து, மறுநாள் சூடு செய்து சாப்பிடுவதை விட,தண்ணீர் ஊற்றி வைத்து சாப்பிடுவது, செரிமானத்துக்கும் நல்லது, சத்துகளும் கிடைக்கும். அந்த ஊட்டச் சத்துகள் கரைந்திருப்பதால், நீராகாரமும் ரொம்ப நல்லது. மேலும், பழைய சாதம் சாப்பிட்டால் எடை கூடும், தூக்கம் வரும் என்று சொல்வதில் உண்மை இல்லை. எந்த உணவையும் வயிறு முட்ட சாப்பிட்டால் தான் தூக்கம் வரும். அளவுக்கு அதிகமாக சாப்பிடும் போதுதான் எடை கூடும். வெறும் பழையது மட்டும் சாப்பிடாமல், கூடவே துவையல் அல்லது காய்கறிப் பொரியல் ஏதாவது சேர்த்து, 'பேலன்ஸ்டு' உணவாக சாப்பிட வேண்டும். பழையசாதத்தின் ஆயுள் 15 மணி நேரம் தான். முதல் நாள் இரவு 10 மணிக்கு தண்ணீர் ஊற்றி வைத்தால், அதில் இருந்து அதிகபட்சம் 15 மணி நேரத்துக்குள் சாப்பிட்டு விட வேண்டும். அதற்கு மேல் பழையசாதத்தை அறையின் வெப்ப நிலையில் வைக்கக் கூடாது.சர்க்கரை நோயாளிகள், அளவோடு சாப்பிடலாம்

பழைய சாதம் பற்றி, நம்பாரம் பரியமருத்துவம் என்னசொல்கிறது?

'அகத்தியர் குணவாகடம்' என்னும் மருத்துவ நூலில் பழஞ்சோற்றின் பெருமை பற்றி, ஒரு பாடலே இருக்கிறது. பொதுவாகவே, வெயில்காலத்தில் பித்தம் அதிகமாக இருக்கும். பித்தம் என்பது நெருப்பின் குணம். அதனால், பித்தம் சார்ந்த நோய்களும் அதிகமாக ஏற்படும். செரிமான நெருப்பு அதிகரிப்பதால், பெரும் பசி எடுக்கும்.

உடல் எரிச்சல் ஏற்படும். இவை எல்லாவற்றையும் ‘நியூட்ரலைஸ்’ செய்து, உடம்பின் தேஜஸைக் கூட்டுகிறது பழையசோறு. ‘பிரமேயம்’ எனப்படும் மனநிலைக் குறைபாடுகள், வன்முறையைத்தூண்டும் ஆக்ரோஷம் ஆகிய உணர்வுகளை இந்த உணவு கட்டுப்படுத்தும். பித்தத்தைக் கட்டுப்படுத்துவதால், அதன் எதிர்க் குணமான உடலில் கபத்தின் தன்மை அதிகரிக்கிறது. அதனால் தான், பழையது சாப்பிட்டதும் நமக்குக் குளுமையான உணர்வு ஏற்படுகிறது. சுருங்கச்சொன்னால், ‘ஆற்று நீர் வாதம் போக்கும், அருவிநீர் பித்தம் போக்கும், சோற்றுநீர் இரண்டையும் போக்கும்’.

### வாழ வைக்கும் வாழை இலைக்கு ஜே!



### இயற்கைஇனிமை

வெப்ப மண்டல நாடுகளில் வாழ்பவர்களுக்கு இயற்கை கொடுத்த கொடை என்று நாம் வாழையைச் சொல்லலாம். வாழை மரத்தின் அடி முதல் நுனி வரை அனைத்துமே நமது வாழ்வியலோடு கலந்த பயன்பாடுகள். வீட்டு விழாக்கள் மற்றும் பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் வாழைக்கன்று மற்றும் வாழைக்கம்பங்களை நடுவதில் தொடங்கி, விருந்து பரிமாற வாழை இலையைப் பயன்படுத்துவது வரை எல்லாவற்றுக்குப் பின்பும் மருத்துவக் காரணங்கள் இருக்கின்றன. விழாக்களில் விருந்தினருக்கு உணவு பரிமாற வாழை இலையைத்தான்

இன்றளவிலும் பயன்படுத்தி வருகிறோம். வாழை இலையில் சாப்பிடுவதன் மூலம் உடலுக்கு மட்டுமல்ல... சூழலியலுக்கும் நல்லது என்கிறார் சித்த மருத்துவர் மருதமலை ஆர்.சுப்ரமணியம்.

‘‘உணவுச் சங்கிலியில் முதல் உணவே இலைகள்தான். எல்லாத் தாவரங்களும் இலைகளை உடையவை. இலைகள் உயிரினங்களின் முக்கிய உணவாக இருக்கிறது. இலையில் உள்ள பச்சையம் சூரிய ஆற்றலை உள்வாங்கி அதனை உயிராற்றலாகவும் உணவாகவும் மாற்றுகிறது. அனைத்து எரிபொருட்களுக்கும் இலைகள்தான் மூலப்பொருளாக இருக்கிறது.நமது முன்னோர் உணவு பரிமாறு வதற்கு வாழை இலையைத் தேர்ந்தெடுத்ததற்கான காரணம் அது பெரிதாக இருக்கிறது என்பது மட்டுமல்ல... வாழை இலையில் ஆன்டி ஆக்சிடன்ட் அதிகஅளவில்இருக்கிறது.

இதனால் செல் சிதைவு ஏற்படாமல் இளமையுடன் இருக்க முடியும். அதோடு மன அழுத்தம், புற்றுநோய் மற்றும் இதய நோய்களும் தடுக்கப்படுகின்றன. வாழை இலையில் இருக்கும் Polyphenol, செல்களில் உள்ள டிஎன்.ஏவை கதிர்வீச்சுகளிலிருந்து பாதுகாக்கிறது. சிறுநீரகக் கல்லுக்கு வாழைத்தண்டு சாறு உகந்தது என்பது போல, வாழை இலையும் சிறுநீரகம் மற்றும் விதைப்பை தொடர்புடைய பிரச்னைகளிலிருந்து நம்மை பாதுகாக்கிறது. வாழை இலையில் உள்ள பச்சையம் நோய் எதிர்ப்பு சக்தியாகவும் விளங்குகிறது.

சூடான சாப்பாட்டை வாழை இலையில் பரிமாறும்போது அந்த சூட்டில் இலை லேசாக வெந்து இலையின் பச்சையத்தில் உள்ள Polyphenol சாப்பாட்டில் கலந்து விடும். இதன் மூலம் அதில் உள்ள வைட்டமின் ஏ, சிட்ரிக் அமிலம், கால்சியம் மற்றும் கரோட்டின் ஆகியவை நமக்குக் கிடைக்கின்றன. வாழை இலையின் சிறப்பம்சமே அதன் குளிர்ச்சித் தன்மைதான். மரத்திலிருந்து அறுத்தெடுக்கப்பட்ட பின்பும் கூட வாழை இலை ஆக்சிஜனை வெளியிட்டுக்கொண்டே இருக்கும். வாழை இலையில் வைக்கப்படும் கீரைகள், காய்கள், பழங்கள், பூக்கள் ஆகியவை

விரைவில்வாடாது.

அழுகி விடாது. வாழை இலை வெளியிடும் ஆக்சிஜன் அந்தப் பொருட்களுக்கும் கிடைப்பதால் அவை ஃப்ரெஷ்ஷாக இருக்கும். வாழை இலையின் குளிர்ச்சி உணவை சீக்கிரம் ஆற வைத்து விடும். இயற்கை மருத்துவத்தில் வாழை இலையை சூரியக் குளியலுக்கு பயன்படுத்துகிறோம். சுவாசிப்பதற்கான துவாரம் விட்டு உடல் முழுவதும் வாழை இலையை வைத்துக் கட்டி வெயிலில் படுக்க வைத்து விடுவோம். வெயில் இலை வழியாக உள்ளே வந்து வியர்வையை உண்டாக்கும்.

இதனை சூரிய ஒளி இலைக்குளியல் என்போம். இதனால் சரும நோய்கள் நீங்கி சருமம் புதுப்பொலிவு பெறும், செரிமான சக்தி அதிகரிக்கும். மேலும் வியர்வைத் துவாரங்கள் திறந்து கொள்வதால் நுரையீரலின் மூச்சு விடும் சக்தி அதிகரிக்கிறது. இதனால் மிகுந்த புத்துணர்ச்சி ஏற்படும். வைட்டமின் டி சத்து பற்றாக்குறை உள்ளவர்களுக்கு சூரிய ஒளி இலைக்குளியல்ஆகச்சிறந்த மருத்துவம்.

தீக்காயங்களுக்கு ஆளானவர்களை வாழை இலையில்தான் படுக்க வைப்பார்கள். வாழை இலையின் குளிர்ச்சியும் அது வெளியிடும் ஆக்சிஜனும் தீப்புண்ணுக்கு இதமாகவும், சீக்கிரம் காயங்களை ஆற்றக் கூடியதாகவும் இருக்கிறது. வாழை இலை சருமத்தில் ஒட்டாது மற்றும் நோய்த்தொற்று ஏற்படுத்தாது என்பதால் தீக்காயங்கள் ஏற்பட்டவர்களுக்குஅருமருந்து.

சரும அரிப்பு, பூச்சிக்கடி ஆகியவற்றுக்கும் வாழை இலை மருந்தாகப் பயன்படுகிறது. கல்லீரல்தான் நமது உடலின் ரசாயனத் தொழிற்சாலையாக செயல்படுகிறது. வாழை இலை கல்லீரலுக்கு உகந்தது. கல்லீரலைத் தாக்கக்கூடிய நோய் மஞ்சள் காமாலை. வாழை இலையை அரைத்து அதை மஞ்சள் காமாலைக்கு மருந்தாகப் பயன்படுத்துகிறோம்.

வாழை இலையில் சாப்பிடுவதால் உடலுக்கு பல நன்மைகள் ஏற்படுகிறது என்பதோடு மட்டுமே நின்று விடவில்லை. சாப்பிட்டு முடித்த பின் வாழை இலை கால்நடைகளுக்கு உணவாகவோ, நிலத்துக்கு உரமாகவோ மாறிவிடுகிறது. ஆகவே, வாழை இலையில் சாப்பிடுவதை வாடிக்கையாக்கிக் கொள்ள வேண்டும். இன்றைக்கு பெரும்பாலான உணவகங்களில் பாலிதீன் தாளில்தான் உணவு பரிமாறுகிறார்கள். சூடான உணவை அதில் பரிமாறும்போது அதன் நச்சு உணவில் கலந்து கேடு விளைவிப்பதோடு, அது மக்காமல் சூழல் சீர்கேட்டையும் ஏற்படுத்தும்.

யானைக்கு சில மருந்துகள் கொடுக்கும்போது வாழை இலையில் வைத்துதான் கொடுப்பார்கள். சில வகை உணவுப் பொருட்களை நீராவியில் வேக வைக்க வாழை இலையில் சுருட்டிதான் வேக வைப்பார்கள். இப்படியாக நமது உணவுப் பழக்கத்தில் வாழை இலை மிகவும் அத்தியாவசியமானதாக இருக்கிறது. திருவிழா மற்றும் வீட்டு விசேஷங்களில் மக்கள் கூட்டம் அதிகமாகும்போது ஆக்சிஜன் பற்றாக்குறை ஏற்படும் என்பதால்தான், வாழைக்கம்பங்களை நட்டு வைக்கிறோம்.

இப்படி பார்க்கும்போது நமது பண்பாட்டில் வாழைக்கு முக்கியமான இடம் இருக்கிறது. நமது முன்னோர் எவ்வளவு நுட்பமாக ஆராய்ந்து இதனை பின்பற்றியிருக்கிறார்கள் என்பதையும் உணர முடியும்'' என்கிறார் சுப்ரமணியம்.

**-கி.ச.திலீபன்**

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## தேவநதியை ரூ.5½ கோடியில் மேம்படுத்தும் பணி அமைச்சர் ஜெயபால் தொடங்கி வைத்தார்

ரூ.5½ கோடியில் நாகை தேவநதியை மேம்படுத்தும் பணியை அமைச்சர் ஜெயபால்தொடங்கிவைத்தார்.

தேவநதி

நாகையில் உள்ள உப்பனாறு எனப்படும் தேவநதி ஆற்றை ரூ.5½ கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணிக்கான பூமிபூஜை நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு கலெக்டர் பழனிசாமி தலைமை தாங்கினார். மீன்வளத்துறை அமைச்சர் ஜெயபால் கலந்து கொண்டு பணியை தொடங்கி வைத்தார்.

அப்போதுஅவர்கூறியதாவது:-

நாகை தேவநதி ஆற்றை 20 கிலோ மீட்டர் முதல் 22.40 கிலோ மீட்டர் நீளம் வரை தூர்வாரும் பணி, 17.20 கிலோ மீட்டர் முதல் 22.40 கிலோ மீட்டர் நீளம் வரை கரைகளை பலப்படுத்தும் பணி, 6 வடிகால்கள் மதகடைப்பு பலகைகளுடன் வடிகால் புனரமைப்பு பணி, 415 மீட்டர் கரைகளில் சருக்கை சுவர் அமைக்கும் பணி, 190 மீட்டர் தடுப்பு வேலி அமைக்கும் பணி உள்ளிட்ட பணிகள் ரூ.5½ கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படஉள்ளது.

இதன்மூலம் ஆணைமங்கலம், அகரக்கடம்பனூர், பாலையூர், தெத்தி,

கடம்பரவாழ்க்கை, செல்லூர், பெருங்கடம்பனூர், புதியநம்பியார்நகர் மற்றும் நாகை நகரப்பகுதிகள் பயன்பெறும். இந்த பணிகள் பொதுப்பணித்துறை நீர்வள ஆதாரத்துறை வெள்ளாறு வடிநிலக் கோட்டம்மூலம்மேற்கொள்ளப்படுகிறது.

தளமட்டச்சுவர்

தேவநதியின் கரைகளை பலப்படுத்தி சீரமைக்கும் பணி மேற்கொள்வதால் சுமார் 9 ஆயிரத்து 218 ஏக்கர் விளை நிலங்கள் வெள்ளக்காலங்களில் நீரில் மூழ்கி சேதமடைவது தவிர்க்கப்படும். வெள்ளநீர் சுலபமாக வடிய வகையாகிறது. கரையோரம் வசிக்கும் மக்கள் வெள்ளத்திலிருந்து தங்களது பொருட்களை பாதுகாக்க முடியும். மேலும் நகர எல்லைப்பகுதி சுத்தமாவதுடன் மக்கள் தொற்றுநோயிலிருந்து பாதுகாக்கப்படுவர்.

நாகை மாவட்டம், கீழ்வேளூர் ஒன்றியம் காக்கழனி கிராமத்தில் கடுவையாற்றின் குறுக்கே ரூ.146 லட்சம் மதிப்பில் 85.5 மைல் தளமட்டச்சுவர் அமைக்கப்பட உள்ளது. இதனால் காக்கழனி, ஆத்தூர், நுகத்தூர், தப்பளாம்புலியூர் கிராமங்களில் உள்ள கிணறுகள் மற்றும் ஆழ்குழாய் கிணறுகளில் நிலத்தடி நீர் மட்டம் உயரும். இதனால் 808 ஏக்கர் விளை நிலங்கள் பாசன வசதி பெறும். இவ்வாறுஅவர்கூறினார்.

நிகழ்ச்சியில்¢ மாவட்ட ஊராட்சி தலைவர் சந்திரசேகரன், நாகை நகரசபை தலைவர் மஞ்சுளா சந்திரமோகன், துணைத்தலைவர் அப்துல்காதர், பொதுப்பணித்துறை நீர்வள ஆதாரத்துறை செயற்பொறியாளர் ரவிச்சந்திரன், உதவி செயற்பொறியாளர் ராமச்சந்திரன், உதவி பொறியாளர்கள் மஜித், கமலக்கண்ணன், நகராட்சி ஆணையர் ஜான்சன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## வெப்பநிலை மாறுபாடு காரணமாக கோழிகளில் தீவன எடுப்பு குறைய வாய்ப்பு ஆராய்ச்சி நிலையம் தகவல்




வெப்பநிலை மாறுபாடு காரணமாக கோழிகளில் தீவன எடுப்பு குறைய வாய்ப்பு இருப்பதாக வானிலை ஆராய்ச்சி நிலையம் சார்பில் தெரிவிக்கப்பட்டுஉள்ளது.

ஆராய்ச்சிநிலையம்

நாமக்கல் மாவட்டத்தில் இன்று முதல் 3 நாட்களுக்கு நிலவும் வானிலை குறித்து கால்நடை மருத்துவ கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் சார்பில் வெளியிடப்பட்டு உள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

அடுத்த 3 நாட்கள் வானம் லேசான மேகமூட்டத்துடன் காணப்படும். மழை பெய்ய வாய்ப்பு இல்லை. காற்று மணிக்கு 5 கி.மீ. வேகத்தில் தென்கிழக்கு திசையில் இருந்து வீசும். வெப்பநிலையை பொறுத்த

வரையில் அதிகபட்சமாக 91.4 டிகிரியாகவும், குறைந்தபட்சமாக 71.6 டிகிரியாகவும் இருக்கும். காற்றின் ஈரப்பதம் அதிகபட்சமாக முறையே 74, 75, 76 சதவீதமாகவும், குறைந்தபட்சமாக 42, 43, 44 சதவீதமாகவும் இருக்கும்.

தீவனஎடுப்பு

பிப்ரவரி மாதத்தின் 2-வது வாரத்திலும் தை மாதத்தின் இறுதி வாரத்திலும் பொதுவாக பகல் வெப்பம் ஏறுமுகமாகவும், இரவில் வெப்பம் குறைந்தும், உயர்ந்தும் மாறி, மாறி காணப்படும். பின் பனி காலகட்டத்தில் நிலவும் இத்தகைய வானிலை இன்னும் ஒரிரு வாரங்களுக்கு தொடரும். இதனால் கோழிகளில் தீவன எடுப்பு குறைய வாய்ப்புஉள்ளது.

முட்டை உற்பத்தி குறையாமல் இருக்க, இத்தகைய வானிலையில் தீவனத்தில் பூஞ்சை நச்சுகள் குறைவாகவும், அதனை உற்பத்தி செய்ய ஏதுவான காரணியான ஈரப்பதம் குறைந்த உலர்ந்த மூலப்பொருட்களை கொண்டு தயாரிக்கப்பட்டதாகவும் இருக்க வேண்டும். கடந்த வாரத்தில் மக்காச்சோளத்தில் பூஞ்சை நச்சின் அளவு உயர்ந்து இருப்பது தெரியவந்தது. எனவே அதன் உபயோகத்திலும், கொள்முதலிலும் கவனம் தேவை. இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டு உள்ளது.

**நாமகிரிப்பேட்டையில் 225 மஞ்சள் மூட்டைகள் ரூ.15 லட்சத்திற்கு ஏலம்**



நாமகிரிப்பேட்டையில் 225 மஞ்சள் மூட்டைகள் ரூ.15 லட்சத்திற்கு ஏலத்திற்குபோனது.

மஞ்சள்

ராசிபுரம் அருகே நாமகிரிப்பேட்டையில் உள்ள ராசிபுரம் தாலுகா கூட்டுறவு உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனை சங்கம் கிளை வளாகத்தில் வாரந்தோறும் செவ்வாய்க் கிழமை மஞ்சள் ஏலம் நடந்து வருகிறது. வழக்கம்போல் நேற்றும் மஞ்சள் ஏலம் நடந்தது.

இந்த ஏலத்தில் நாமகிரிப்பேட்டை, ஒடுவன்குறிச்சி, புதுப்பட்டி, முள்ளுக்குறிச்சி, பேளுக்குறிச்சி, அரியாக்கவுண்டம்பட்டி, ஆத்தூர், ஊனத்தூர் உள்பட பல்வேறு பகுதிகளில் இருந்து விவசாயிகள் மஞ்சளை விற்பனை செய்வதற்காக ஏலத்திற்கு கொண்டு வந்திருந்தனர். மஞ்சளை

ஏலம் எடுப்பதற்காக சேலம், ஈரோடு, நாமகிரிப்பேட்டை, ஒடுவன்குறிச்சி உள்பட பல பகுதிகளில் இருந்து வியாபாரிகள் வந்திருந்து மஞ்சளை ஏலம்எடுத்தனர்.

ரூ.15லட்சத்துக்குஏலம்

நேற்று நடந்த ஏலத்தில் விரலி ரகம் 115 மூட்டைகளும், உருண்டை ரகம் 110 மூட்டைகளும் கொண்டு வரப்பட்டு இருந்தன. இதில் விரலி ரகம் குறைந்தபட்சம் ஒரு குவிண்டால் ரூ.9,390-க்கும், அதிகபட்சமாக ரூ.10,470-க்கும், உருண்டை ரகம் குறைந்தபட்சம் ஒரு குவிண்டால் ரூ.6,242-க்கும், அதிகபட்சமாக ரூ.8,742-க்கும் ஏலம் போனது.

நேற்று நடந்த ஏலத்தில் 225 மஞ்சள் மூட்டைகள் ரூ.15 லட்சத்திற்கு ஏலம் விடப்பட்டது. கடந்த வாரத்தை விட இந்த வாரம் நடந்த ஏலத்தில் மஞ்சள் வரத்து சற்று குறைந்த அளவில் வந்திருந்தது. அதே சமயத்தில் விலையும் சற்று குறைந்து காணப்பட்டது.

**குன்னூரில் பச்சை தேயிலைக்கு மாத விலையாக கிலோவுக்கு ரூ.17 நிர்ணயம்**



குன்னூர்

குன்னூரில் பச்சை தேயிலைக்கு மாத விலையாக கிலோவுக்கு 17 ரூபாய் 50 காசு விலை நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது.

<u>60 ஆயிரம் சிறுவிவசாயிகள்</u>

நீலகிரி மாவட்டத்தில் சுமார் 60 ஆயிரம் சிறு விவசாயிகள் தேயிலை சாகுபடியில் ஈடுபட்டு வருகிறார்கள். இதன் காரணமாக நீலகிரி மாவட்டத்தின் பொருளாதார நிலையை தேயிலை விலையே நிர்ணயம் செய்து வருகிறது. சிறு தேயிலை விவசாயிகள் தங்கள் தோட்டத்தில் விளையும் பச்சை தேயிலையை கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளுக்கும், தனியார் தொழிற்சாலைகளுக்கும் வினியோகம் செய்து வருகின்றனர்.

இந்த தொழிற்சாலைகளில் இருந்து தயாரிக்கப்படும் தேயிலைத்தூள் இலை ரகமாகவும், டஸ்ட் ரகமாகவும் தயாரிக்கப்படுகின்றன. இவ்வாறு

தயாரிக்கப்படும் தேயிலைத்தூள்கள் குன்னூரில் உள்ள ஏல மையங்களுக்கு கொண்டு செல்லப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது.

<u>உறைப்பனி</u>

நீலகிரி மாவட்டத்தில் கடந்த சில மாதங்களுக்கு முன்பு இரவு நேரங்களில் உறைப்பனி பெய்ததால் தேயிலை மகசூல் பாதிக்கப்பட்டு உள்ளது. இதேபோல் வடஇந்தியாவில் தேயிலை உற்பத்தி செய்யும் மாநிலங்களில் அதிகளவு பனிபெய்து வருவதால் தேயிலை உற்பத்தி கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளது. இதனால் வட இந்திய வர்த்தகர்களின் கவனம் தென்னிந்திய தேயிலை மையங்களில் திரும்பியுள்ளது. இதன்காரணமாக தென்னிந்திய தேயிலைத்தூளுக்கு கூடுதல் விலை கிடைத்து வருகிறது.

இதுமட்டுமின்றி தேயிலை உற்பத்தி கடுமையாக பாதிக்கப்பட்டு இருப்பதால் தென்னிந்திய தேயிலைக்கு கூடுதல் கிராக்கி இருந்து வருகிறது. குன்னூர் தேயிலை ஏல மையத்தில் கடந்த டிசம்பர் மாதம் 4–வது வாரத்தில் இருந்து தேயிலைத்தூள்களின் விலை உயர்ந்து வருகிறது. இதன் எதிரொலியாக பச்சை தேயிலைக்கும் கூடுதல் விலை கிடைத்து வருகிறது.

<u>ரூ.17 விலை நிர்ணயம்</u>

கடந்த ஜனவரி மாதம் விவசாயிகள் வினியோகம் செய்த பச்சை தேயிலைக்கு தற்போது மாத விலை நிர்ணயம் செய்யப்பட்டது. இதில், ஒரு கிலோ சாதாரண வகை பச்சை தேயிலை ஒரு கிலோவுக்கு 17 ரூபாய் 50 காசு விலை வழங்கப்பட்டது. ஆனால் தனியார் தேயிலை தொழிற்சாலைகளில் கிலோவுக்கு ரூ.20 விலை வழங்கப்பட்டது. இதேபோல் முதல் தர பச்சை தேயிலை கிலோவுக்கு ரூ.25 விலை வழங்கப்பட்டது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

இந்த விலை உயர்வை தக்க வைத்துக்கொள்ள விவசாயிகள் தரமான பச்சை தேயிலையை பறிக்க வேண்டும் என்றும், தேயிலை தொழிற்சாலைகள் தரமான தேயிலைத்தூளை உற்பத்தி செய்ய வேண்டும் என்றும் தேயிலை வாரியம் அறிவுரை வழங்கியுள்ளது.

## நீலகிரியில் கடும் வறட்சி எதிரொலி கால்நடைகளுக்கு தேவையான தீவன பயிர் வளர்க்க ஆர்வம் காட்டும் விவசாயிகள்



ஊட்டி

நீலகிரியில் கடும் வறட்சி ஏற்பட்டு உள்ளதால் கால்நடைகளுக்கு தேவையான தீவன பயிரான ஓட்ஸ் வளர்ப்பில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

<u>தீவன தட்டுப்பாடு</u>

நீலகிரி மாவட்டத்தில் கடந்த டிசம்பர் மாதம் முதல் பகலில் கடும் வெயிலும் இரவில் கடுங்குளிரும் நிலவி வருகிறது. இதனால் மாவட்டத்தில் உள்ள வனப்பகுதிகளில் கடும் வறட்சி ஏற்பட்டு உள்ளது. மேலும் பனிப்பொழிவால் புற்களும் கருகி வருகின்றன.

இதன்காரணமாக கால்நடைகளுக்கு உணவு தட்டுப்பாடு ஏற்பட்டு உள்ளது. எனவே கால்நடைகளுக்கு தீவன தட்டுப்பாட்டை போக்கு ஓட்ஸ் பயிரை பயிரிடும் பணியில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

<u>90 நாளில் அறுவடை</u>

இதுகுறித்து ஊட்டி பகுதியை சேர்ந்த விவசாயி மாதேஸ் கூறியதாவது:–
ஆண்டுதோறும் ஜனவரி மாதம் தொடங்கி மார்ச் மாதம் வரை கால்நடைகளுக்கு தீவன தட்டுப்பாடு ஏற்படுகிறது. இந்த மாதங்களில் பனி மற்றும் அதனை தொடர்ந்து நிலவும் வறட்சியால் புற்கள் கருகி விடும். இதன்காரணமாக தீவன தட்டுப்பாடு ஏற்படுகிறது. மேலும் இந்த மாதங்களில் நீலகிரியில் மழைப்பொழிவும் இருக்காது.
எனவே கால்நடைகளுக்கு தீவன தட்டுப்பாட்டை போக்க ஓட்ஸ் பயிரை பயிரிட்டு வருகிறோம். இதனை பயிரிட்ட நாளில் இருந்து 90–வது நாளில் அறுவடை செய்து கொள்ளலாம். மேலும் இதற்கு தண்ணீரும் அதிகமாக தேவைப்படாது. இவ்வாறு அவர் கூறினார்.

## விவசாயிகளுக்கு பயிர் மேலாண்மை குறித்த பயிற்சி



பொன்னமராவதி அருகே உள்ள கருப்புகுடிப்பட்டியில் அட்மா திட்டத்தின் மூலம் விவசாயிகளுக்கு பயறுவகை பயிர்களில் பயிர் மேலாண்மை குறித்த பயிற்சி நடைபெற்றது. பயிற்சிக்கு பொன்னமராவதி வேளாண்மை உதவி இயக்குனர் ஜெயபாலன் தலைமை தாங்கினார். பயறுவகை பயிர்களின் உற்பத்தியை

பெருக்குவதற்கான ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை தொழில்நுட்பங்கள் குறித்து வேளாண்மை அலுவலர் கவிதா பயிற்சியளித்தார். பயிறுவகை பயிர்களைத்தாக்கும் பூச்சிகள் மற்றும் நோய்கள் பற்றியும், அதனைக் கட்டுப்படுத்தும் முறைகள் குறித்தும் வட்டார தொழில்நுட்ப மேலாளர் தேவி பயிற்சியளித்தார். நிகழ்ச்சியில் பயிர் மேலாண்மை குறித்த கையேடு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. இதில் ஒன்றியக்குழு உறுப்பினர் சிவசாமி, ஊராட்சி தலைவர் பழனிச்சாமி, கூட்டுறவு சங்க தலைவர் ராஜமாணிக்கம் மற்றும் பலர் கலந்து கொண்டனர். முன்னதாக உதவி வேளாண்மை அலுவலர் அருளானந்தம் வரவேற்றார். முடிவில் உதவி வேளாண்மை அலுவலர் குமாரசாமி நன்றி கூறினார்.

## விவசாயிகளுக்கு நுண்ணீர் பாசன பயிற்சி



முதுகுளத்தூரில் விவசாயிகளுக்கு நுண்ணீர் பாசன பயிற்சி அளிக்கப்பட்டது.

பராமரிப்பு

முதுகுளத்தூர் வட்டார வேளாண்மைத்துறையின் மாநில விரிவாக்க திட்டங்களுக்கான உறுதுணை சீரமைப்புத் திட்டத்தின் கீழ் முதுகுளத்தூர் வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலக கூட்ட அரங்கத்தில் வேளாண்மை துணை திட்ட இயக்குனர் உதுமான் முகைதீன் தலைமையில் 40 விவசாயிகளுக்கு நுண்ணீர் பாசன அமைப்பின் பராமரிப்பு முறைகள் பற்றிய பயிற்சி நடைபெற்றது.

வேளாண்மை உதவி பொறியாளர் சிவக்குமார் விவசாயிகளுக்கு தெளிப்பு நீர்ப்பாசனம் செயல்பாடுகள் குறித்தும், தமிழ் குமார் சொட்டுநீர், நுண்ணீர் பாசனம் அமைப்பதற்கான வழிமுறைகள் மற்றும் பராமரிப்பு பற்றியும் விரிவாக பயிற்சி அளித்தனர்.

பயிற்சியின் முடிவில் விவசாயிகளை மேலக்கன்னிசேரி கிராமத்திற்கு அழைத்துச் சென்று சொட்டு நீர்,நுண்ணீர் பாசனம் அமைக்கப்பட்ட வயலில் செயல்விளக்கம் மற்றும் அதன் பராமரிப்பு முறைகள் பற்றி எடுத்துக்கூறப்பட்டது.

அப்போது வேளாண்மை உதவி இயக்குனர் ராஜேந்திரன் கூறியதாவது:- சாதாரண நீர்ப்பாசன முறையில் ஒரு ஏக்கருக்கு தேவைப்படும் நீரைக்கொண்டு சொட்டுநீர்ப்பாசனம் மூலம் 2½ ஏக்கருக்கு பாசன நீர் பயன்படுத்தப்படுகிறது. நுண்ணீர் பாசனமுறையில் பயிருக்கு தேவையான நேரத்தில் தேவையான அளவில் நீர் கிடைப்பதால் பயிர்கள் செழிப்பாக வளர்ந்து அதிக மகசூலைக் கொடுக்கின்றன. களைகள் கட்டுப்படுத்தப்படுகின்றன.

பண்ணைக்குட்டை

பயிருக்கு தேவையான அளவில் உரங்களை பயிர் வளர்ச்சிக்கு ஏற்ப பாசன நீரில் பகிர்ந்தளிக்க முடிகிறது. முதுகுளத்தூர் வட்டாரத்தில் அதிக அளவில் பண்ணைக்குட்டை அமைக்கப்பட்டுஉள்ளது, தற்போது பண்ணைக்குட்டையில் அதிக அளவு மழைநீர் உள்ளது. எனவே விவசாயிகள் பாசன நீரை பண்ணைக்குட்டையில் இருந்து சிக்கனமாக

பயன்படுத்துவதற்கு நுண்ணீர் பாசனமுறையை பின்பற்றலாம். இவ்வாறு அவர் கூறினார். பயிற்சி ஏற்பாடுகளை வேளாண்மை திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் ஹேமலதா மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் அய்யப்பன் மற்றும் ஜெயகண்ணன் செய்திருந்தனர்.

## விவசாயிகள் விற்கும் நெல்லுக்கு கொள்முதல் நிலையத்தில் உடனே பணம் தர வேண்டும் முன்னாள் எம்.எல்.ஏ. கோரிக்கை




விவசாயிகள் விற்கும் நெல்லுக்கு கொள்முதல் நிலையத்தில் உடனே பணம் தரவேண்டும் என்று தி.மு.க. முன்னாள் எம்.எல்.ஏ. கோரிக்கை விடுத்துள்ளார்.

பருவமழை

இளையான்குடி தி.மு.க ஒன்றிய செயலாளரும், முன்னாள் எம்.எல்.ஏ.வுமான சுப.மதியரசன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:- இளையான்குடி பகுதி மிகவும் வறட்சியான

பகுதியாக இருந்து வருகிறது. பருவமழை காலத்தின்போது சிவகங்கை மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் மழை பெய்தாலும் இளையான்குடி பகுதியில் மட்டும் பருவமழை பொய்த்தது. இந்தநிலையில் தற்போது இளையான்குடி ஒன்றியத்தில் நெல் அறுவடை முடிந்த நிலையில் காலதாமதாகமாக அரசின் சார்பில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்பட்டுஉள்ளது.

இதனால் விவசாயிகளிடம் கொள்முதல் செய்யப்படும் நெல் மூடைகளுக்கான பணம் 5 நாட்களுக்கு பின்பு தான் அவர்களின் வங்கி கணக்கில் செலுத்தப்படுகிறது. மேலும் விவசாயிகள் தங்களது அவசர தேவைக்கு தங்களிடம் உள்ள நெல்லை விற்கின்றனர். ஆனால் அவர்களுக்கு வழங்கப்படும் பணம் தாமதமாக கிடைப்பதால் அவர்கள் பழையபடியே தனியார் நெல் வியாபாரிகளை நாடி செல்ல வேண்டியது உள்ளது.

நடவடிக்கை

இதனால் அந்த வியாபாரிகள் விவசாயிகளிடம் இருந்து குறைந்த விலைக்கு நெல்லை வாங்கிச் செல்கின்றனர். எனவே மாவட்ட நிர்வாகத்தினர் விவசாயிகள் விற்கும் நெல் மூடைகளுக்கு விரைவில் அதற்குரிய பணம் அவர்களுக்கு கிடைப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர் அதில் கூறி உள்ளார்.

**சாத்தனூர் அணையில் இருந்து விவசாய பாசனத்திற்கு 12–ந் தேதி தண்ணீர் திறப்பு அதிகாரி தகவல்**



திருவண்ணாமலை

சாத்தனூர் அணையில் இருந்து விவசாய பாசனத்திற்காக 12–ந் தேதி தண்ணீர் திறந்து விடப்பட உள்ளது என்று பொதுப்பணி துறை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

சாத்தனூர் அணை

திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம்பட்டு வட்டத்தில் தென் பெண்ணை ஆற்றின் குறுக்கே சாத்தனூர் அணை அமைந்துள்ளது. கர்நாடக மாநிலத்தில் இருந்து வரும் தண்ணீரால் கிருஷ்ணகிரி அணை நிரம்புகிறது. கிருஷ்ணகிரி அணை நிரம்பி, அங்கிருந்து வரும் தண்ணீரால் சாத்தனூர் அணை நிரம்பும்.

சாத்தனூர் அணை நீர், திருவண்ணாமலை மாவட்டத்தின் குடிநீர் மற்றும் விவசாய பாசன பயன்பாட்டிற்கும், விழுப்புரம் மாவட்ட விவசாய பாசனத்திற்கும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. சாத்தனூர் அணையின் மொத்த உயரம் 119 அடி. மொத்த கொள்ளளவு 7,321 மில்லியன் கன அடி.

முழு கொள்ளளவு

கடந்த நவம்பர், டிசம்பர் மாதம் பெய்த தொடர்மழை மற்றும் கிருஷ்ணகிரி அணையில் இருந்து உபரிநீர் திறந்து விடப்பட்டதாலும் சாத்தனூர் அணை நிரம்பி அதன் முழு கொள்ளளவை எட்டியது. நேற்றைய நிலவரப்படி அணையில் 7 ஆயிரத்து 321 மில்லியன் கன அடி நீர் இருப்பு உள்ளது.

சாத்தனூர் அணையில் இருந்து ஆண்டு தோறும் பிப்ரவரி மாதம் விவசாய பாசனத்திற்காக தண்ணீர் திறப்பது வழக்கம். அதன்படி, இந்த ஆண்டிற்கான பாசன நீர் 12–ந் தேதி (வெள்ளிக்கிழமை) திறக்கப்பட உள்ளது. அணையின் வலதுபுற கால்வாய் வழியாக தண்ணீர் திறக்கும் போது 24 ஆயிரம் ஏக்கர் நிலமும், இடதுபுற கால்வாய் வழியாக தண்ணீர் திறக்கும்போது 21 ஆயிரம் ஏக்கர் நிலமும் பாசன வசதி பெறும். ஆக மொத்தம் 45 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும்.

100 நாட்களுக்கு...

இதன்படி முதல் 30 நாட்களுக்கு இடதுபுற கால்வாயில் 290 கன அடி நீரும், வலதுபுற கால்வாயில் 220 கன அடி நீரும் திறந்து விடப்படும். பின்னர் 5 நாட்கள் நீர் திறப்பு நிறுத்தப்பட்டு, அடுத்த 30 நாட்களுக்கு இடதுபுற கால்வாயில் 350 கன அடி நீரும், வலதுபுற கால்வாயில் 220 கன அடி நீரும் திறந்து விடப்படும். அதன் பின்னர் 5 நாட்கள் நீர் திறப்பு நிறுத்தப்படும்.

அணையில் தற்போது போதுமான அளவு நீர் இருப்பு உள்ளதால், 100 நாட்கள் வரை வருகிற மே 22–ந் தேதி வரை பாசனத்திற்காக தண்ணீர் திறந்து விட வாய்ப்புள்ளது. அதைத் தொடர்ந்து திருக்கோயிலூர் அணைக்கட்டு, பழைய ஆயக்கட்டுக்கு உரிமை நீரான 806 மில்லியன் கன அடி தண்ணீர் பாசனத்திற்காக விரைவில் திறக்கப்படும். இதன் மூலம் திருக்கோவிலூர் அணைக்கட்டு, பழைய ஆயக்கட்டு வாயிலாக 5 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும்.

மேற்கண்ட தகவலை பொதுப்பணி துறை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.